CC No. 32/2012 18.03.2026

**PW 8– பா.ச. ராமகிருஷ்ணன் த/பெ. சண்முகம்பிள்ளை**

**( சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கின் புகார்தாரரிடமிருந்து புகாரை நான் நேரடியாக பெறவில்லை என்றால் சரிதான், ஒத்தக்கடை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஜெயமணி புகார் மனுவை பெற்றுள்ளார். இவ்வழக்கின் புகார்தாரர் பூமி விபத்தில் இறந்து போன முத்துகாளையின் மருமகன் என்ற விவரத்தை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் ஆம். நான் இவ்வழக்கில் வாகன ஆய்வாளர் மற்றும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர், தலைமை காவலர் சந்திரசேகர் மற்றும் சார்பு ஆய்வாளர் ஜெயமணி மட்டும்தான் விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையில் சார்பு ஆய்வாளர் ஜெயமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் சார்பு ஆய்வாளர் ஜெயமணியை விசாரணை செய்யவில்லை, அவரை விசாரணை செய்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, ஆனால் தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் 03.05.2011 ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கும் மேலூர் – மதுரை

புறவழிச்சாலையில் கொடிமங்களம் விலக்கு அருகே விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் விபத்தை நேரடியாக பார்த்தாக எந்த சாட்சியும் சொன்னதாக வாக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல, அசா1 பூமி விபத்தை நேரடியாக பார்த்தாக சொல்லியுள்ளார். அசா1 எனது விசாரணையில் ஏதோ ஒரு பாலத்தில் அமர்ந்திருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், அவர் சென்ற சைக்களுடன் அங்கு இருந்தார். நான் தாக்கல் செய்துள்ள அசாஆ 4 அவ்வாறு பாலம் எதுவும் வரையப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் பார்வை மகஜரில் பாலத்தை குறிப்பிட்டுள்ளேன். அதேபோல் விபத்து நடந்த இடத்திற்கு அருகே பேருந்து நிறுத்தம் இருப்பதை எனது விசாணையில் தெரிந்துகொண்டேனா என்றால் கோப்பை பார்வையிட்டதில் அவ்வாறு எதுவும் இல்லை. அதேபோல் விபத்து நடந்த இடத்திற்கே அருகே உள்ள கடைக்காரர்களை விசாரித்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

3) நான் தாக்கல் செய்த வரைபடத்தில் விபத்தில் வாகனங்கள் உடைந்த பாகங்கள் மற்றும் விபத்தில் காயம்பட்டவரின் ரத்தம் படிந்த விவரத்தை அசாஆ 2 மற்றும் அசாஆ 4 லிலும் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் இல்லை. அதேபோல் மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணத்தில் இது தொடர்பாக எந்த ஆவணமும் இல்லை. அதேபோல் கிடாரிபட்டியிலிருந்து மதுரை செல்வதற்கு விபத்து நடந்ததாக சொல்லப்படும் 4 வழிச்சாலையை கடக்க எந்த அவசியமும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தில் இறந்தவருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இருந்ததாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் நான்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி தனது காரில் அவரது குடும்பத்துடன் வந்திருந்த விவரத்தை நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் ஆம். இந்த விபத்தானது இறந்துபோன முத்துக்காளையின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும் நடந்த விபத்து, அவரது குடும்பத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக தவறுதலாக எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.